



# ஹர ஹர சங்கரா

**FREE COPY**
**Sept - 2024**
**Vol. 3 - ISSUE 12**



# KODAMBAKKAM TIMES

உங்க லிஸ்டில் இருக்கிற எதுவும்
எங்களுக்குத் தேவையில்லை
'சுஸ்வாத்' திலிருந்து சீர் பட்சணங்கள்
செய்துடுங்கோ அது போதும்

அதுக்கென்ன!
பேஷா பண்ணிட்டா போச்சு!





- ★ சுத்தமான நெய்யில் தயாராகும் ஸ்வீட் வகைகள்
- ★ சுத்திகரிக்கப்பட்ட,கொலஸ்ட்ரால் தொல்லை இல்லாத தாவர எண்ணெயில் தயாராகும் கார வகைகள்
- ★ அதிகப்படியான எண்ணெய் அகற்றப்படுவதால் நீண்டநாள் கெடாமல் இருக்கும் தென்னிந்திய பட்சணங்கள் (Free of Excess Oil)

- ★ புழுங்கலரிசி கைமுறுக்கு, தட்டை, சீடை, மிக்ஸர், தேன்குழல், ரிப்பன்பகோடா, காரசேவு, காராபூந்தி, முள்ளு முறுக்கு etc.,
- ★ மைசூர் பாகு, லட்டு, கோதுமை அல்வா, மாலாடு, மனோஹரம், பாதுஷா, புட்டு, ,வெல்லச் சீடை, மில்க் ஸ்வீட்ஸ் etc.,
- ★ கல்யாண ஸ்வீட்ஸ், சீர் முறுக்கு, சீர்வரிசை பட்சணங்கள் எவ்வளவு தேவையானாலும் ஆர்டர் பேரில் உடனே தயார் செய்து தருகிறோம்

**Suswaad**

THE NAME FOR HIGH QUALITY TRADITIONAL SWEETS AND SAVOURIES

3/2, Venkatraman Street, T.Nagar,
Chennai - 600 017. Ph : 044 2815 5558, 044 2815 2678

**Branches**

**Mandaveli**

#10/3, Madhans Apartments, Ground Floor, South canal Bank Road,
Opp. st. Johns School, Mandaveli, chennai - 600 028
Phone: 044 24950978 Cell: +91 9940654138

**K.K.Nagar**

#No, 9/A, Kalinga colony, PT. Rajan salai, K.K. Nagar, chennai 600 078
(opp. Sakthi Vinayakar temple) Near Sivan park
Phone: 044 23662300 Cell: +91 9789976111

# பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

அடி உதவுவது போல அண்ணன் தம்பி கூட உதவமாட்டார்கள் என்பது பழமொழி. ஆண்டவனின் திருவடியைப் பற்றினால் அனைத்திலும் வெற்றி காணலாம் என்பதைக் குறிக்கும் விதத்திலேயே அந்தப் பழமொழி அமைந்திருக்கின்றது. ஆண்டவனே, "அடி" வாங்கித் திருவிளையாடல் நடத்திய மாதம் தான் ஆவணி.

சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்ட திருநாள், ஆவணி மாதம் மூலம் நட்சத்திரம் ஆகும். அன்றைய தினம் சிவாலயங்கள் தோறும் பிட்டுக்கு மண் சுமந்த திருநாளைக் கொண்டாடுவார்கள். அதில் கலந்து கொண்டு வழிபாடு செய்தால் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும்.

இறைவனே வேலை பார்த்துச் சம்பளம் வாங்கிய நாள் என்பதால், உத்தியோகத்தில் பிரச்சினை இருப்பவர்கள், அன்றைய தினம் உள்ளன்போடு சிவபெருமானை வழிபட்டால் பிரச்சினை விலகும். எதிர்ப்புகள் அகன்று இனிய வாழ்க்கை அமையும்.

அநாதைக் கிழவியின் பெயர் செம்மனச்செல்வி, அவள் மதுரை தென்கிழக்குத் திசையில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தாள். அவளுக்கு உற்றார் உறவினர்கள் யாருமில்லை.

வயது முதிர்ந்து, முதுகு கூன் விழுந்துவிட்ட அந்த ஏழைக் கிழவி, பிச்சையெடுத்து வயிறு வளர்க்க விரும்பாமல், பிட்டு அவித்து அதனை வீதி வீதியாகச் சென்று விற்று வாழ்க்கை நடத்தி வந்தாள்.

அவள் சிவபெருமான் மீது அளவற்ற பக்தியும், பாசமும் கொண்டவள். தினமும் காலையில், தான் அவிக்கும் பிட்டின் முதற் பங்கைச் சோமசுந்தரக் கடவுளுக்கு நிவேதனம் செய்துவிட்டு அதன்பின்னரே பிட்டு விற்பனையை ஆரம்பிப்பாள்.

வைகை ஆற்றுக்கரையின் ஒரு பகுதியை அடைக்கும் பொறுப்பு அவளுக்குக்


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :
Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

Please contact : 8939070034
E-mail : kodambakkamtimes@yahoo.com

கொடுக்கப்பட்டபோது, அவள் மனம் கலங்கிக் கண்ணீர் வடித்தாள். யாருமற்ற அநாதைக் கிழவியான அவள், சோமசுந்தரக் கடவுளின் சந்நிதிக்கு ஓடினாள்.

"ஐயனே, இதுவும் உன் சோதனையா? இந்த அநாதைக் கிழவிக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள யாருமில்லை, கரையை நானே கட்டுவதென்றால், என் உடம்பில் பலம் இல்லை. கூலிக்கு ஆள் வைத்துச் செய்வதற்கும் கையிலே காசு இல்லை. என்னுடைய பங்குக்கு கரையை உரிய நேரத்தில் அடைக்காவிட்டால், அந்தப் பகுதியாலே வெள்ளம் பாய்ந்து, கடைசியில் முழுக்கரையையும் உடைத்துவிடும்.



அரசனின் தண்டனையும் எனக்குக் கிடைக்கும். ஐயா ... தினமும் காலையில் உன்னை என் பிள்ளையாகப் பாவித்துத்தான் எனது முதற் பிட்டை உனக்கு நிவேதனம் செய்து வந்திருக்கிறேன், இந்தக் கஷ்டத்திலிருந்து நீதான் ஐயனே என்னைக் காக்க வேண்டும்..." என்று சிவபெருமான் முன்னிலையில் கண்ணீர் விட்டுக் கதறினாள். தினமும் காலையில் அவள் அன்புடன் படைத்த பிட்டை உண்டு மகிழ்ந்திருந்த சோமசுந்தரக் கடவுள் புன்னகை புரிந்தார். அவரது திருவிளையாடல் அரங்கேறும் கட்டம் வந்து விட்டதே.

தம்மையே உறவு என்று எண்ணி அன்பு காட்டிய கிழவிக்கு உதவி புரிந்து. அதன் மூலமே ஒரு திருவிளையாடலை நடத்தத் திருவுள்ளம் கொண்டார். உலக மக்களை உய்விக்க எந்தக் கூலியும் எதிர்பாராமல் அளப்பரிய கருணை புரிந்து அருளும் பெருமான், அநாதரவாய் நின்ற அந்த ஏழைக் கிழவிக்கு அருள் புரிவதற்காக ஒரு கூலியாளாக உருவம் கொண்டார்.

காண்பவர்கள் கண்களைச் சுண்டியிழுக்கும் பேரழகுடன், சிவந்த மேனியும், ஒளிவீசும் முகமும் கொண்டு விளங்கிய சிவபெருமான், இடுப்பிலே அழுக்கு படிந்த பழைய துணியை அணிந்து கொண்டார். அவரது தோளின்மீது ஒரு மண்வெட்டி இருந்தது, தலையிலே சும்மாடு வைத்து, அதன்மேலே, மண் அள்ளிக் கொட்டுவதற்குப் பயன்படும் கூடையைக் கவிழ்த்துக்கொண்டு, புன்னகையுடன் அவளருகே வந்தார். செம்மனச்செல்வியின் அருகே சென்ற அவர், எல்லாருக்கும் கேட்கும்படி, "கூலிக்கு ஆள் வேண்டுமா?" ... கூலிக்கு ஆள் வேண்டுமா? ... " என்று குரல் கொடுத்துக் கூவினார்.

கலங்கி நின்ற செம்மனச்செல்வியின் காதுகளில் அந்த வார்த்தைகள் தேனாகப் பாய்ந்தன. கூன் விழுந்த உடலுடன் நின்ற அந்த முதிய கிழவி, தன் தலையை நிமிர்த்தி, தெய்வீக அழகு சொட்டும் அந்தத் திருமுகத்தைப் பார்த்தாள். "அப்பனே, நீ கூலிக்கு வேலை செய்வாயா? என்று கேட்டாள். அதுதானே அம்மா என் தொழில்? என்றார் இளைஞன்." அப்பா, வைகையாற்றுக் கரையில் ஒரு பங்கை அடைக்கும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அதனை அடைக்க என் உடம்பிலே பலம் இல்லை. கையிலே காசும் இல்லை. எனக்காக அந்தப் பங்குக் கரையை நீ அடைத்துத் தருவாயா, ஐயனே?" என்று கேட்டாள் அவள்.

இளைஞன் சிரித்தார். "சரி அம்மா, அப்படியே செய்வேன். ஆனால் அதற்குக் கூலி என்ன தருவாய்?" என்று கேட்டார். "ஐயா, உனக்குக் கூலியாகத் தருவதற்கு என்னிடம் காசு பணம் இல்லை. ஆனால், உனக்குக் கூலியாக உனது பசி தீரச் சுடச்சுட பிட்டு அவித்துத் தருவேன்" என்றாள். சரி தாயே, உன்னுடைய பிட்டையே கூலியாக வாங்கிக் கொள்வேன். இப்போது எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. சுடச்சுடப் பிட்டு அவித்து இப்போதே தந்தாயானால், அதை உண்டு பசியாறிவிட்டு நான் உனது பங்குக் கரையை ஒரு நொடியில் அடைத்து விடுவேன்," என்றார் ஈசன்.

பெரும் மகிழ்ச்சியடைந்த செம்மனச்செல்வி, தனது குடிசைக்கு ஓடோடிச் சென்று, தேவையான பொருட்களையும், பாத்திரங்களையும் எடுத்து வந்தாள். ஆற்றங்கரையில், ஒரு மர நிழலில் நெருப்பை மூட்டி விரைவாகப் பிட்டை அவித்து, அதை உதிர்த்துக் கை நிறைய அள்ளி, அந்தத் தெய்வக் கூலியாளிடம் அன்புடன் கொடுத்தாள். மகிழ மர நிழலில் அமர்ந்து, அந்தப் பிட்டைச் சுவைத்து ரசித்துச் சாப்பிட்டார் இறைவன். வயிறார உண்டபின், சரி தாயே, இப்போது பசி தீர்ந்து விட்டது. இனி நான் உன்னுடைய பங்குக் கரையை ஒரு நொடியிலே அடைத்துவிட்டு எனது கூலியை வாங்கிக் கொள்வேன்" என்று கூறிவிட்டு வைகைக் கரையை நோக்கி விரைந்து நடந்தார்.

வைகைக் கரையில், கரையை உயர்த்திக் கட்டும் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. வேலைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்த தலையாரியிடம் சென்று. செம்மனச்செல்வியின் பங்குக் கரையைக் கட்டுவதற்குத் தான் வந்திருப்பதாகக் கூறித் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார். இடுப்புத் துண்டை இறுக்கிக் கட்டிக்கொண்டு வேலையைத் தொடங்கினார். ஆனால், அவர் வேலை செய்த விதமே விசித்திரமானதாக, விளையாட்டாக இருந்தது, மண்ணை வெட்டிக் கூடையில் நிரப்புவார். தூக்கிப் பார்ப்பார். அதிக பாரமாயிருக்கிறதென்று சொல்லி, மண்ணைக் கொட்டி விடுவார். மீண்டும், குறைவாக மண்ணை எடுத்துச் சென்று, ஆற்றின் கரையில் கொட்டிவிட்டு வருவார். பின்பு, கடும் வேலை செய்து களைப்புற்றவர்போல மர நிழலில் படுத்து விடுவார். சிறிது நேரம் தூங்கியபின் எழுந்து, முன்னரே கிழவியிடம் வாங்கி வைத்திருந்த பிட்டை உண்ணுவார். பின்னர் சிறிது நேரம் வேலை செய்வார். இவ்வாறு மிகவும் நிதானமாக, விளையாட்டாக வேலை செய்தார்.

மாலை வேளை நெருங்கிற்று, தலையாரி கரையைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தான். செம்மனச்செல்வியின் பங்கு மட்டுமே அடைபடாமல் இருந்ததையும், அதன் காரணமாக முழுக்கரையுமே உடையும் அபாயம் ஏற்பட்டு இருந்ததையும் கண்டு கடும் கோபம் கொண்டான். "இந்தப் பகுதியை அடைக்கும் கூலிக்காரன் எங்கே? என்று ஆத்திரத்தோடு கேட்டான். சற்றுத் தூரத்திலே, ஒரு மர நிழலில் படுத்துறங்கிக் கொண்டிருந்த அந்தத் தெய்வீக இளைஞனைச் சுட்டிக் காட்டினார்கள் சேவகர்கள். "அவனை இழுத்து வாருங்கள்" என்று தலையாரி கட்டளையிட்டான். சேவகர்கள் அந்த இளைஞனை உறக்கத்திலிருந்து எழுப்பித் தலையாரியிடம் அழைத்து வந்தார்கள்.

"ஏனடா... செம்மனச்செல்வியின் பங்கை அடைப்பதற்கு நியமிக்கப்பட்ட கூலிக்காரன் நீதானே?" என்று தலையரி கேட்டான். மாறாத புன்னகையுடன், "ஆம்" என்று தலையசைத்தார், இறைவன். "அப்படியானால், உனக்குத் தரப்பட்ட வேலையைச் செய்து முடிக்காமல், விளையாடுவதும், உறங்குவதுமாக நேரத்தை வீணடிக்கிறாயே?" என்று தலையாரி கோபத்துடன் கேட்டான். "எல்லாமே எனது திருவிளையாடல்தான்" என்று கூறுவதுபோல், அந்தத் தெய்வீக இளைஞன்

எவ்விதமான பதிலும் கூறாமல் புன்சிரிப்புடன் கம்பீரமாக நின்றான். கள்ளங் கபடமற்ற, தெய்வீக அழகு சொட்டும் அவரது முகத்தையும், கம்பீரமான அவரது தோற்றத்தையும் கண்டு, அவரைத் தண்டிக்கப் பயந்த தலையாரி, உடனே அரசனிடம் சென்று முறையிட்டான். செய்திகேட்டு வேகமாக அந்த இடத்துக்கு வந்த அரசன் அரிமர்த்தன பாண்டியன், அந்தத் தெய்வீக உருவத்தைப் பார்த்து ஒரு கணம் திகைத்து நின்றான். ஆயினும், அந்த இளைஞனின் விளையாட்டுத் தனத்தால், கரை கட்டும் வேலை பாழாவதையும் மக்கள் படும் துன்பத்தையும் எண்ணி ஆத்திரம் கொண்டான்.

அதே வேளை, நடந்ததெல்லாவற்றையும் கேள்வியுற்று, என்ன நடக்குமோ என்ற கவலையுடன் அந்த இடத்திற்கு வேகமாக வந்து சேர்ந்த செம்மனச்செல்வி, இக் காட்சியைக் கண்டு திகைத்து நின்றாள். "அடே கூலிக்காரப் பயலே நீ என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உன்னுடைய பொறுப்பில்லாத தன்மையால் முழுக்கரையுமே பாழாகப் போகிறதே? இதற்கு என்ன சொல்கிறாய்? என்று பாண்டியன் கேட்க .... அவனை நிமிர்ந்து பார்த்துப் புன்சிரிப்புடன் மௌனமாக நின்றார் அந்தத் தெய்வக் கூலியாள். "என்னடா? என்னுடன் பேச மாட்டாயா?... நான் இந்த நாட்டு அரசன் என்பதை மறந்து விட்டாயா? என்று கடுஞ் சினத்துடன் கேட்ட அரிமர்த்தன பாண்டியன், தனது பக்கத்திலே நின்ற அடியாளை நோக்கி, "உம் ... இவனுக்குத் தண்டனை கொடுங்கள்" என்று கட்டளையிட்டான். அரசனுக்குப் பக்கத்திலேயே மலைபோல நிமிர்ந்து நின்றிருந்த அடியாள் தன் கையிலிருந்த நீண்ட பிரம்பை வேகமாக உயர்த்தி ... அந்தத் தெய்வீக இளைஞனின் சிவந்த முதுகில் ஓங்கி அடித்தான். அதே கணம் அந்த அடி அரசன் மேலும் அங்கு சூழ்ந்துநின்ற அத்தனை மனிதர்கள் மேலும், வானத்துத் தேவர்கள் மேலும், நரகத்து அசுரர் மேலும் ஓங்கி வீழ்ந்தது.

ஓங்கி வீழ்ந்த அடியின் வேதனையைப் பொறுக்க முடியாமல், யாவரும் "ஆ" என்று அலறினார்கள். அதே வேளை, தெய்வ மேனியில் அந்த அடியை வாங்கிக்கொண்ட இறைவன், புன்சிரிப்புடன் மறைந்து போனார். பல நாட்களாகப் பெய்து கொண்டிருந்த அடைமழையும், பெரு வெள்ளமும் அந்த ஒரே வினாடியில் அடங்கி விட்டன. வானத்திலிருந்த ஒரு விமானம் இறங்கி வந்து, நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக் கலங்கி நின்று கொண்டிருந்த செம்மனச்செல்வியின் அருகே நின்றது. பக்திப்பரவசத்துடன், கிழவி அந்த விமானத்திலே ஏறிக்கொள்ள, அந்த விமானம் விண்ணில் விரைந்து பறந்து சென்று மறைந்தது. இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்து, அதிசயித்து நின்றுகொண்டிருந்த அரிமர்த்தன பாண்டியனும், ஏனைய மக்களும் உண்மையை உணர்ந்து? வந்திருந்தவர் இறைவனே என்பதைத் தெரிந்து கொண்டு, நிகழ்ந்த தவறுகளுக்காக மனம் வருந்தி, ஐயனே ... ஐயனே... எங்களை மன்னித்துவிடு, இறைவா..." என்று அலறி அழுதார்கள். அப்போது, விண் மேகங்களுக்கிடையிலே, ஒரு ஜோதிப் பிழம்பாக இறைவனாகிய சிவபெருமான் தமது துணைவியாரான உமாதேவியாருடன் தோன்றி", அரிமர்த்தன பாண்டியனே, செம்மனச்செல்வியின் பக்தியின் மேன்மையை உலகுக்கு உணர்த்தவே நாம் இந்தத் திருவிளையாடலைப் புரிந்தோம்" என்று கூறி அவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து மறைந்தார்.

மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் இந்த விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆவணி மூல வழிபாட்டில் கலந்து கொண்டால், மூல நட்சத்திர தோஷங்கள் விலகி ஓடும். முன்னேற்றங்கள் வந்து சேரும். மூல நட்சத்திரத்தில் பிறந்த ஆண், பெண் இருபாலரும் இந்த விழாவில் கலந்து கொள்வது நல்லது.

# ATHMA DIVINE CLUB



Since 1998

மாதம் தோறும் மகா பெரியவா
அனுக்ஷ யாத்திரை சங்கர மடம்
பெரியவா பிருந்தாவனம்,
ஓரிக்கை மணிமண்டபம், தேனம்பாக்கம்

4 நாள் பயணம்
நவம்பர் 2 முதல்
நைனிச்சாரிண்யம் மற்றும்
அயோத்தியா பயணம்

---

நவம்பர் 16 முதல் 22 வரை
காசி யாத்திரை
ஷ்ராத்தம் உள்ளப்பட

---

## பிப்ரவரி 2025
## இலங்கை ராமாயண
## சுற்றுப்பயணம்

- 7 நாட்கள் யாத்திரை
- சொகுசு குளு குளு பயணம்
- நட்சத்திர தங்குமிடம்
- உயர்தர சைவ உணவு

**89396 56479**

# பிள்ளையாருக்கு ஏன் தோப்புக்கரணம் போடுகிறோம்?

பிள்ளையாருக்கு தோப்புக்கரணம் போடுகிறோம். எதற்காக போடுகிறோம் என்ற காரணங்கள் நமக்கு தெரிவதில்லை? அதில் உள்ள காரணங்கள் மறைபொருளாக வைக்கப்பட்டுள்ள ரகசியங்கள் என்னவென்று பார்ப்போம்.

இடகலை என்னும் நாடி வலதுகால் பெருவிரலில் இருந்து புறப்பட்டு மேலே ஏறுகிறது. அதுபோல் பிங்கலை என்னும் நாடி இடதுகால் பெருவிரலில் இருந்து புறப்பட்டு மேலே ஏறுகிறது.



இந்த இரு நாடிகளும் மேலேறி வரும் பொழுது மூலாதாரத்தில் ஒரு பின்னல் போட்டும், இதயத்தில் ஒரு பின்னல் போட்டும், புருவமத்தியில் ஒரு பின்னல் போட்டும் இருக்கிறது. வலது கால் பெருவிரலில் இருந்து வரும் இடகலை என்னும் நாடி புருவமத்தியில் மாறி இடது பக்கமாகவும், இடது கால் பெருவிரலில் இருந்து புறப்பட்டு வரும் பிங்கலை என்னும் நாடி புருவமத்தியில் மாறி வலது பக்கமாகவும், புருவமத்தியில் மாறி, மாறி நெற்றிப் பொட்டு வழியாக மூளைப் பகுதிக்குச் செல்கிறது.

சுழுமுனை என்னும் நாடியானது மூலாதாரத்திலிருந்து ஆரம்பித்து எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாக இருக்கும் நடு துவாரத்தில் உட்புறமாக சஞ்சாரம் செய்து மேல் நோக்கிச் சென்று இரு புருவமத்தியிலுள்ள ஆக்கினை பகுதியைப் பற்றி நிற்கும்.

நெற்றிப் பொட்டில் நாம் இரு கைகளையும் மடக்கி விரல்களால் குட்டிக் கொள்ளும் போது அந்த இடங்களில் உள்ள பின்னல் நரம்புகளில் அந்த அதிர்வு பரவி சரீரத்தில் பின்னி வரும் நரம்புளில் ஒரு துடிதுடிப்பை உண்டாக்குகிறது. அந்த துடிதுடிப்பு மூலாதாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் குண்டலினி சக்தியில் இந்த அசைவு பதிகிறது.

அதற்கு பிறகு இரண்டு காதுகளையும் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடும் போது குண்டலினி சக்தியில் அசைவை ஏற்படுத்துகிறது. பல தடவை தொடர்ந்து தோப்புக் கரணம் போடும் பொழுது குண்டலினி சக்தியை தூண்டி மேலே எழ வைக்கிறது.

தோப்புக் கரணம் போடும் பொழுது குண்டலினி சக்தி மூலாதாரத்திலிருந்து எழுந்து சுழுமுனை நாடி வழியாக புருவமத்தியில் கொண்டு வந்து

# ASTROLOGY

## VASTU CONSULTANT

**PERFECT VASTU FOR HOME FACTORY OFFICE.**

**MANY CLIENTS BENEFITTED WITH VASTU PREDICTIONS WITH US.**

**ONLY WITH APPOINTMENT**

**94441 64859**

நிறுத்திவிடுகிறது. ஜப்பானில் ஜென் புத்த மதத்துறவிகள் இந்த தோப்புக் கரணத்தை குண்டலினி சக்தியை கிளப்புவதற்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

நம்முள் உறங்கிக் கிடக்கும் சக்தியை எழுப்ப தோப்புக்கரணம் போடுகிறோம். இந்த தோப்புக் கரணத்தை பிள்ளையாருக்கு மட்டும் ஏன் போட வேண்டும்? பிள்ளையார் சிலை முன் ஏன் போட வேண்டும் என்பதை பார்ப்போம்.

மனிதர்களுடைய உடலில் ஆறு ஆதாரங்கள் உள்ளன. ஒவ்வொரு ஆதாரத்திற்கும் ஒரு தெய்வசக்தி உண்டு. ஒவ்வொரு ஆதாரத்திலும் உள்ள தெய்வ சக்தியின் அருள் நமக்குக் கிடைத்தால் அந்த ஆதாரத்தை விழிப்படையச் செய்து அதன் சக்தியை நாம் பெற முடியும்.

ஆறு ஆதாரங்களும் அந்த ஆதாரங்களுக்கு உரிய தெய்வச்திகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மூலாதாரம் : விநாயகர்
சுவாதிட்டானம் : பிரம்மா
மணிபூரகம் : விஷ்ணு
அநாகதம் : ருத்திரன்
விசுக்தி : மகேஸ்வரன்
ஆக்கினை : சதாசிவன்

இந்த ஆறு ஆதார தெய்வ சக்திகளின் அருளால் கிடைப்பது தான் சகஸ்ரார சித்தி ஆகும். மேற்கண்ட காரணங்களால் தான் பிள்ளையாருக்கு தோப்புக்கரணம் போடுகிறோம்.

**"ஏரகம் (திருவேரகம்) ஸ்ரீசங்கரநாயகி அம்பிகா உடனுறை ஸ்ரீகந்தநாத சுவாமி, ஸ்ரீஆதி சுவாமிநாத சுவாமி ஆலயத்தில் ஆணி மாதம் 23-24 செப்டம்பர் மாதம் 8/9/2024 மற்றும் 9/9/2024 இரண்டு காலம் சத்ரு ஸம்ஹார த்ரிசதீ மஹா யாகம் நடைபெறவுள்ளது. பக்த மெய்யன்பர்கள் அனைவரும் யாகத்தில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல ஏரகத்திறைவன் அருளைப்பெற்றுய்ய வேண்டுகிறோம்."**

**You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,**

# KODAMBAKKAM TIMES

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**
**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**Please contact : 044 2484 4114**
**E-mail : kodambakkamtimes@yahoo.com**

# You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**EDITION 1**

**COVERING AREAS**

**Kodambakkam, T Nagar & Mambalam**

**EDITION 2**

**COVERING AREAS**

**Vadapalani, Ashok Nagar, K K Nagar, Ramapuram & Virugambakkam**

# KODAMBAKKAM TIMES

Our e-paper id : kodambakkamtimes.in

To advertisement in

KODAMBAKKAM TIMES

21/6, First Floor, Station Road,
West Mambalam, Chennai - 600 033.

Please contact 044 2484 4114

E-mail : kodambakkamtimes@yahoo.com



## ஹர ஹர சங்கரா

## ஆன்மீக இலவச புத்தகம் மாதம் ஒரு முறை கிடைக்கும் உங்கள் பிரதிகளுக்கு அணுகவும்

**SUNDAY HOLIDAY**

**@ KODAMBAKKAM TIMES**

**ASHOK MANSION, 21/6, First Floor,
Mambalam Station Road,
West Mambalam, Chennai - 600 033.**

# ஏழு தலைமுறை பாவங்களையும் போக்கும் பச்சரிசி தானம்

ஏழு தலைமுறை பாவங்களைப் போக்கும் இந்த தலைமுறையில் நீங்கள் தெரிந்து செய்த பாவங்கள், தெரியாமல் செய்த பாவங்கள், அறிந்து செய்த பாவங்கள், அறியாமல் செய்த பாவங்கள், வாயால் பேசிய பாவங்கள் என அனைத்தும் தீருவதற்கு இதைச் செய்யுங்கள்.



சனிக்கிழமையன்று பச்சரிசிமாவை ஒரு கையில் அள்ளி சூரியநமஸ்காரம் செய்துவிட்டு விநாயகப்பெருமானை மூன்று சுற்று சுற்றிவிட்டு அந்த அரிசி மாவை விநாயகரைச் சுற்றிப் போடவும்.

அதை எறும்பு தூக்கிச் செல்லும். அப்படித் தூக்கிச் சென்றாலே நமது பாவங்களில் பெரும்பாலானவை நம்மைவிட்டுப் போய்விடும்.

அப்படித் தூக்கிச் சென்ற பச்சரிசி மாவை எறும்புகள் தமது மழைக்காலத்திற்காக சேமித்து வைத்துக் கொள்ளும்.

எறும்பின் எச்சில் அரிசிமாவின் மீது பட்டதும் அதன் கெடும் தன்மை நீங்கி விடும். இந்த பச்சரிசிமாவை சாப்பிடுவதற்கு அவை இரண்டரை வருடங்கள் எடுத்துக்கொள்ளும்.

இப்படி இரண்டேகால் வருடங்கள் வரை எறும்புக்கூட்டில் இருப்பதை முப்பத்துமுக்கோடி தேவர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

இரண்டரை ஆண்டிற்கு ஒருமுறை கிரகநிலை மாறும். அப்படி மாறியதும், அதன் வலு இழந்துபோய்விடும்.

இதனால் நாம் அடிக்கடி பச்சரிசி மாவினை எறும்புக்கு உணவாகப் போடவேண்டும்.

ஓர் எறும்பு சாப்பிட்டால் 108 பிராமணர்கள் சாப்பிட்டதற்குச் சமம். இதனால் சனிபகவானின் தொல்லைகள் கூட நம்மைத் தாக்காது. (ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, கண்டச்சனி, அர்த்தாஷ்டமச்சனி முதலிய எல்லா சனிதோஷமும் இதில் அடங்கும்).

# பிள்ளையார் பிடித்து வழிபாடு செய்வதின் பலன்கள்

மூல முதற்கடவுளான விநாயகப் பெருமானை வணங்கும் பொழுது ஆறடியில் சிலை செய்து, பல ஆபரணங்களை அணிவித்து அவரை மகிழ்விக்க வேண்டும் என்கிற அவசியமே இல்லை. ஒரு கைப்பிடி மஞ்சளை ஒரு குழந்தையின் கையால் பிடித்து வைத்தாலும் அது பிள்ளையார் தான்.

எந்த காரியத்தையும் விநாயகரை வணங்கி தொடங்குவது மரபு. எந்தெந்த பிள்ளையார் பிடித்து வைத்தால், என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதைப் பார்க்கலாம்.



**பிள்ளையார் பிடித்து வைப்பதன் பலன்கள் :**

**மஞ்சள் பிள்ளையார்**

நல்ல காரியங்களை தொடங்கும்போது மங்களகரமாக நடைபெற ஒரு கைப்பிடி மஞ்சளை பிள்ளையாராக பிடித்து வைப்பது வழக்கம். மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வழிபட சகல சௌபாக்கியமும் கிடைக்கும். காரிய சித்தி தருவார்.

**குங்குமப் பிள்ளையார்**

குங்குமத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்க செவ்வாய் தோஷம் அகலும். குழந்தைகளைப் படிப்பில் வல்லவராக்குவார்.

**புற்று மண் பிள்ளையார்**

புற்று மண்ணினால் பிள்ளையார் செய்து வணங்க நோய்கள் அகலும். விசவாயம் செழிக்கும், வியாபாரத்தை பெருக வைப்பார்.

**வெல்லப் பிள்ளையார்**

வெல்லத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் உடலில் உள்ளேயும், வெளியேயும் உள்ள கட்டிகள் (கொப்பளம்) கரையும்.

**உப்பு பிள்ளையார்**

உப்பினால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் எதிரிகளின் தொல்லை நீங்கும், எதிரிகளை விரட்டுவார்.


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

KODAMBAKKAM TIMES

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

Please contact : 9382682128

E-mail : kodambakkamtimes@yahoo.com

**வெள்ளெருக்கு பிள்ளையார்**

வெள்ளெருக்கில் பிள்ளையார் செய்து வணங்கினால் பில்லி, சூனியம் விலகும். செல்வம் உயரச் செய்வார்.

**விபூதி பிள்ளையார்**

விபூதி பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் உஷ்ண நோய்கள் நீங்கும்.

**சந்தனப் பிள்ளையார்**

சந்தனத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் புத்திர பேறு கிடைக்கும்.

**பசுஞ்சாணப் பிள்ளையார்**

பசுஞ்சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் சகல தோஷமும் விலகி, வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வழி வகுக்கும், நோய்களை நீக்குவார்.

**வாழைப்பழ பிள்ளையார்**

வாழைப் பழத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் வம்ச விருத்தி உண்டாகும்.

**வெண்ணெய் பிள்ளையார்**

வெண்ணெய்யில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் கடன் தொல்லை நீங்கும்.

**சர்க்கரை பிள்ளையார்**

சர்க்கரையில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் சர்க்கரை நோயின் வீரியம் குறையும்.

**கல் பிள்ளையார்**

கல்லால் பிள்ளையார் செய்து வைத்து வணங்கினால் வாழ்வில் எடுத்த காரியத்தில் வெற்றி தருவார்.

**மண் பிள்ளையார்**

மண்ணில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் உயர் பதவிகள் கொடுப்பார்.

பிள்ளையார் எளியோனுக்கு எளியார் என்பதால் எப்படி பிடித்தாலும் பிள்ளையார் விக்னங்களை தீர்த்து வைப்பார். எந்த இடத்தில் இருந்து விநாயகனே என்றாலும் ஓடோடி வந்து வினை தீர்ப்பவர் விநாயகர். அப்படிப்பட்ட பிள்ளையாரை அனுதினமும் தொழுது வாழ்வில் இன்புற்று இருப்போம்.

# KRISHNA DELISH COFFEE




எங்களிடம் தரமான காபி
கொட்டை அரைத்து தரப்படும்

1 கிலோ காபி பவுடர்

ரூ 640 மட்டுமே

* Condition Apply

நம்ம ஆத்து காபி

FILTER COFFEE RS.15 only

COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore Ganapathy's
CELEBRATING
80 YEARS
ANNIVERSARY
Since 1942

# Mylapore Ganapathy's ®

Since 1942

## BUTTER & GHEE

*Traditionally Since 1942*

FRESH BUTTER • PURE GHEE • CHEKKU OILS

APPALAMS • PODIS • INSTANT MIXES • PICKLES

THOKKUS • SWEETS • SAVOURIES • VADAMS

VATHALS • DRY FRUITS • SPICES • BAKERY PRODUCTS

NATIVE SPECIALS • SEER BAKSHANAM

**MYLAPORE BRANCH**
14, Chitrakulam West Street,
Mylapore, Chennai - 600 004.
Tel : 044-2464 0292, 89390 27272

**WEST MAMBALAM BRANCH**
No. 50, Arya Gowda Road, West Mambalam,
(Near Shobana Kalyana Mandapam), Chennai - 600 033.
Tel : 044-4856 6363, 89390 36363

Queries / Feedback : 044 - 4856 6781 WhatsApp : 73581 56781
Email : info@mylaporeganapathys.com

SHOP ONLINE www.mylaporeganapathys.com